**பியகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பியகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பியகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் செலுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்குரிய பெறுமதி ரூபா 3,590,492 தொகை நிதிக்கூற்றில் வேலைக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 31 இன் கணக்கில் அது சரிசெய்யப்படும். | கணக்குகளை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரண்டு செயற்திட்டங்களுக்குரிய சபைக்கு கிடைக்கப் பெற்ற ரூபா 64,735 தொகை நிதிக்கூற்றில் வேலைக் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 31 இன் கணக்கில் அது சரிசெய்யப்படும். | பிழையாக செலவு மற்றும் வரவு வைக்கப்பட்ட கணக்குகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (இ) | மாகொல பல்நோக்கு கட்டிடத்தில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்தல் கட்டம் II செயற்திட்டத்திற்குரிய கம்பஹா உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 1,913,136 தொகை நிதிக்கூற்றில் வேலைக் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | ஓ. கெ. ஐ. சர்வதேச பாடசாலை முன்னுள்ள பொது வீதியை அபிவிருத்தி செய்வதற்காக 10 சதவீத நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 99,865 தவிர மிகுதிப் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் மொத்த தொகையான ரூபா 899,865 காண்பிக்கப்பட்டதன் காரணமாக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 800,000 வீதம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | கணனி மற்றும் துணைப் பாகங்களின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய ரூபா 2,222,100 பெறுமதியுடைய 27 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இதன் பிரகாரம் கணனி மற்றும் துணைப் பாகங்களின் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வு ரூபா 333,315 குறைத்த கணிப்பிடப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் கணனி துணைப் பாகங்களின் மீதி அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக ஏனைய விரிவான வருமானம் இனங்காணும் போது மிகையில் / பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியமான ரூபா 11,037,333 குறைக்கப்பட்டு குறைத்து காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான விரிவான வருமானம் ரூபா 22,074,666 இனால் அதிகரித்து வருமானக் கூற்றில் முன்பக்கத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டள்ள படி விரிவான வருமானம் 2022.12.31 இல் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரிவான வருமானம் சரியாக கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 04 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 04 முச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,000,000 தொகை 2019 ஆம் ஆண்டின் போது கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டு 2021 இன் நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 10 ஆந் திகதியளவில் அந்த வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 5,000,000 இனால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி மற்றும் கடன்கொடுத்தோர் மீதி என்பன அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவுகளுக்காக பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்திற்கு அனுப்பி அங்கீகாரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் 2021 ஆம் ஆண்டில் கடன்கொடுத்தோர் ஒதுக்கீடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு வரையிலும் அங்கீகாரம் கிடைக்காதிருக்குமாயின் 2023 இன் நிதிக்கூற்றுக்களில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 ஆம் ஆண்டின் அங்கீகாரம் பெறப்பட்டு கொள்வதற்கு செய்வதற்கோ அல்லது 2022 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் கடன்கொடுத்தோர் மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது தளபாடங்கள், இயந்திரம், கணனி, அலுவலக உபகரணங்களை கொள்வனவ செய்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 34,313,879 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட போதும் 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன் கடன்கொடுத்தோர் யார் எனவும் இனங்காணப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக ரூபா 34,313,879 இனால் நடைமுறையல்லா சொத்துக்களின் மீதி மற்றும் கடன்கொடுத்தோர் மீதி அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் கொள்வனவு செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த போதும் கம்பஹா உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைகள் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 394,332,270 ஆக இருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் செலுத்துதல்கள் நிலுவையாகவிருந்த காலம் 01 இற்கும் 02 வருடங்களுக்கு இடையிலான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 50,355,267 மற்றும் ரூபா 02 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 9,870,114 என்பவற்றை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியை பரீட்சித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ஆ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மீதி ரூபா 290,315,452 ஆக இருந்ததுடன் அறவீடுகள் நிலுவையாகவிருந்த காலம் 01 இற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 2,222,761 மற்றும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 11,603,960 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதியை பரீட்சித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதி ரூபா 115,300,309 மற்றும் நேரொத்த அறிக்கையின் பிரகாரமான மீதி ரூபா 114,993,169 ஆனமையால் ரூபா 307,140 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | கணக்கு அறிக்கைகள் அதற்குரிய ஆவணங்கள் மற்றும் பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரியான மீதி பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் தெல்கொடுவ உப அலுவலகத்தில் 2008 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை | கூடிய விரைவில் மதிப்பீடொன்றை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மதிப்பீட்டுத் | மீள் நினைவூட்டல் அனுப்பி மதிப்பீட்டை செய்து புதிய ஆதனவரி வீதத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| அடிப்படையாகக் கொண்டு மகாகொல மற்றும் கடவத்த உப அலுவலகங்களில் 2012 ஆம் ஆண்டில் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | திணைக்களத்திலிருந்து வாய்மொழி மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆதனவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 128,555,443 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 130,566,894 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஆதனவரி, வியாபார நிலைய வாடகை மற்றும் வாடகை வருமானம் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 1 இற்கும் 03 வருடங்களுக்கு இடையே, 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே, 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையே மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட பெறுமதி ரூபா 5,896,652 தொகை, ரூபா 16,052,998 தொகை, ரூபா 14,041,039 தொகை மற்றும் ரூபா 23,567,892 தொகை ஆக இருந்ததுடன் வருமான அறவீடுகளின் செயல்முன்னேற்றம் முறையே சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 50, 19 மற்றும் 51 சதவீதமாக இருந்தமையும் இதன் பிரகாரம் வருமானத்தை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் மீண்டும் பரவிய Covid-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் தற்போது நாடு முழுவதும் காணப்படுகின்ற பொருளாதார பின்னடைவுகளுக்கு இடையே உள்ளடங்கிய ஏனைய வருமானங்களை சேகரித்துக் கொள்ளும் எதிர்பார்ப்பு மட்டத்தில் மேற்கொள்ள முடியாதிருந்தது. பிடியானை விநியோகித்தல், நடமாடும் சேவை நடாத்துதல், வீட்டுக்கு வீடு சென்று நிலுவைப் பணத்தை சேகரித்தல் போன்ற செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட காணி தொடர்பான மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட 92 காணிகள், காணிகளின் பரப்பளவு ஏக்கர் 2.36 ஆன 07 காணிகள், பரப்பளவு மற்றும் பரப்பளவை இனங்காணாமல் 07 காணிகள் மதிப்பிடப்பட்டு காணியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் படி கணக்கில் உள்ளடக்கப்படாத ஆதனங்கள், பொறிகளை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணி பெறுமதியின்றி நிதிக்கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலிபவுசர் ஒன்றின் சேவைக்காக உள்ள கோரிக்கையை கவனத்தில் கொண்டு பொதுப் சுகாதார பரிசோதகரின் முன்மொழிவின் படி 3600 லீற்றர் கலிபவுசர் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,100,871 செலவிடப்பட்டிருந்தது. இந்த கலிபவுசரிலிருந்து 2019 ஆம் ஆண்டின் போது மாத்திரம் 120,000 வருமானம் கிடைத்திருந்தது, 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இந்த கலிபவுசரை பொருத்தி பயன்படுத்துவதற்கு மேலதிக டிறக்டர் ஒன்று இல்லாமை, கழிவுப் பொருள் அகற்றும் நிலையத்திற்காக செல்வதற்கு அதிக காலம் மற்றும் | பியகம பிரதேச சபையின் மூலம் மாகாணங்களுக்கிடையிலான மாகாண அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி அதிகார சபை சிரேஷ்ட இயந்திரப் பொறியியலாளர் மூலம் பெறப்பட்ட மாதிரியில் இந்த கலிபவுசர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக கண்டறிந்து இந்த கலிபவுசரை மீண்டும் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் | கலிபவுசர் மூலம் ஆதாயத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செலவினங்களை செய்வதற்கு ஏற்படுகின்றமை, டிறக்டரை பொருத்தி பயன்படுத்த வேண்டியிருந்தமையால் எடுக்கப்படுகின்ற காலத்தை அதிகரித்ததனால் கோரிக்கை குறைவடைந்தமை மற்றும் பவுசரின் பராமரிப்பு செலவினம் மற்றும் வருமானத்தை ஒப்பிடும் போது வருமானம் வரையறுக்கப்பட்டிருந்தமை போன்ற விடயங்களினால் விளைவற்ற சொத்துக்கு உட்பட்டிருந்தது. | எடுக்கப்படும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு அறிக்கையின் படி இனங்காணப்பட்ட 18 மயான நிலங்கள் மற்றும் 92 பொதுக் காணிகள் என்பன 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் காணி அளத்தல், எல்லைகளை இனங்காணல், பெயர்பதாகைகள் என்பன பொருத்தப்பட்டிருக்கவில்லை. | COVID 19 தொற்றுநோய் மற்றும் காணிகளுக்குரிய பழைய ஆவணங்களை கண்டறிவதில் கஷ்டமாக இருந்தமையால் அதிகாரம் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்ட போதும் கூடிய விரைவில் மிகுதி மயான நிலங்களையும் அளவிட்டு பூர்த்தி செய்யப்படுமென அறியத் தருகின்றோம். தற்போது மயான நிலங்களில் பெயர்ப் பதாகை பொருத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. | மயான நிலங்களை அளந்து பெயர்ப் பதாகைகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் மேற்கொள்ளப்பட்ட காணி தொடர்பான மெய்மையாய்வு அறிக்கையின் படி 37 பேர்ச் வல்கம, பண்டாரதெனிய காணியின் துண்டு கழிவுப் பொருட்களை அகற்றப்பட்டிருந்த போதிலும் அளவு இனங்காண முடியாதிருந்த வல்கம இரவு சந்தை மற்றும் வல்கம, மல்வான காணிகள் அனுமதியற்ற வகையில் | 05 குடும்பங்கள் குடியிருந்து வருகின்ற தெல்கொட மீகஹலந்த பெயருடைய காணியின் உரித்தை உறுதிப்படுத்துவதற்காக சபையிடம் சட்டரீதியான ஆவணங்கள் காணப்படாதிருந்ததுடன் உரிய காணியை முதலீட்டுச் சபையின் மூலம் வாடகை அடிப்படையில் கையேற்றுக் கொள்வதற்கு | சபைக்குச் சொந்தமான காணிகளை மெய்மையாய்வு செய்து அனுமதியற்ற குடியிருப்பாளர் களை அகற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் தெல்கொட வீடமைப்பு உத்தேச முறைமையுடன் காணியில் 03 வீடுகள் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருந்தமையும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் சபை அனுமதியற்ற பயன்படுத்துதல்களை அகற்றியமையால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்ற தரப்பினராக இருந்தமை மாத்திரம் குறிப்பிட்டு ஆவணங்கள் சபைக்கு சொந்தமாக காணப்பட்டது. | |
| (இ) | இலங்கை முதலீட்டு சபைக்குச் சொந்தமான ஹெக்டயர் 0.2886 அளவான காணியில் 2022 ஆம் ஆண்டின் போது நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் முழுவதும் கைவிடப்பட்டிருந்த கட்டிடம், பல்நோக்கு கட்டிடமாக அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பிரதேச சபை நிதியத்திலிருந்து ரூபா 24.47 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 16.9 மில்லியன் உள்ளடங்கலாக கூட்டுமொத்தமாக ரூபா 41.37 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்தக் காணிகளை சபைக்கு கையேற்பதற்கு 2022 மே 23 ஆந் திகதிய கடிதத்தில் சனாதிபதியின் இணக்கப்பாடு கிடைத்திருந்த போதிலும் 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்றல் எதிர்வரும் மிகுதி நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியை சபைக்கு சட்டரீதியாக கையேற்று கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

**ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையில் சேவையை கைவிட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 31,802 தொகை, சேவையை கைவிட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 694,480 தொகையும், மரணமடைந்த 02 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 252,700 தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 368,730 தொகையும் ஆக கூட்டுப்பெறுமதி ரூபா 1,347,712 ஆன ஊழியர் கடன் முற்பண அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் இடமிருந்து ரூபா 31,802 தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ரூபா 368,730 ஆன தொகை பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |